03.09.2024 MCOP No.100/2016

சாட்சி : PW 1 அபிபக்தம்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :**

இந்த விபத்தில் இறந்த சிவக்குமார் என்னுடைய கணவர். விபத்து நடந்தது எனக்கு நேரடியாக தெரியாது. என் கணவர் விபத்துச்சமயத்தில் திருவாடனையிலிருந்து தொண்டிக்குச் சென்றார். அப்போது சாலையோரமாக நின்று கொண்டிருந்த டி.எண.63பி 6910 டிப்பர் லாரிமீது மோதிதான் என் கணவர் விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு என் கணவரின் கவனக்குறைவுதான் காரணம் என்றும் லாரி ஓட்டுனரின் கவனக்குறைவு காரணம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் கணவர் ஆட்டோ எலக்டிரிசியன் கடை வைத்து இருந்தார் என்பதை காட்டுவதற்கு ஆதாரம் எதையும் தாக்கல் செய்யவில்லை. அவருக்கு மாதம் எவ்வளவு வருமானம் வந்தது என்பதைக்காட்டக்கூடிய ஆதாரம் எதையும் தாக்கல் செய்யவில்லை. அவர் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்திருந்தார். ஆனால் இது பற்றி மனுவிலும் நிருபணவாக்குமூலத்திலும் சொல்லவில்லை. அவர் தலைக்கவசம் அணிந்து இருந்தால் அவருக்கு தலைக்காயம்ஏற்பட்டு இருக்காது என்று சொன்னால் சரியல்ல. தலைக்கவசம் அணியாமல் இருசக்கர வாகனம் ஓட்டுவது என் கணவரின் கவனக்குறைவு தான் என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் ஒட்டிச்சென்ற டி.எண்.65எஎ 8309 இருசக்கர வாகனம் காப்பீட்டு செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அதனை தாக்கல் செய்யவில்லை. மா.சா.ஆ3 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையியல் எனது கணவரின் இருசக்கர வாகனத்திற்க்கான காப்பீடு தாக்கல் செய்யப்படவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது. அவருக்கு விபத்தின்போது இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு உரிய ஓட்டுனர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மா.சா.ஆ3 அறிக்கையிலும் ஓட்டுநர் உரிமமும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொல்லப்பட்டுள்ளது. என் கணவரின் கவனக்குறைவால் இந்த விபத்து நடந்ததால் இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. மனு அனுமதிக்கப்பட்டாலும் ஓட்டுனர் உரிமம் இல்லாதது, தலைக்கவசம் அணியாதது போன்றக்காரணங்களுக்காக குறிப்பிட்ட சதவீதத் தொகை கழித்துக்கொள்ள வேண்டியது என்று சொன்னால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொருத்தவரை இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்படகூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.